பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 08 | திங்கட்கிழமை | 25.09.2023 | அதிர்வு 55

## கிணற்றில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணத்தில் கிணற்றில் இருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், மயிலங்காடு - ஏழாலை பகுதியில் வசித்து வந்த ஆறுமுகம் துரை ராசாவே (வயது 51) சடலமாக 02

# நினைவேந்தல்களை தடுக்கவே முடியாது!

## நீதி அமைச்சர் திட்டவட்டம்

- ஏ.ஜே. சார்ள்ஸ் -

"இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு ஜனநாயக வழியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மூவின மக்களுக்கும் உரிமை உண்டு. அதைத் தடுத்து நிறுத்துவது அடிப்படை உரிமை மீறலாகும்."

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 02



## ஜனாதிபதி நாளை ஜேர்மனி பயணம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை செவ்வாய்க்கிழமை இரவு ஜேர்மனிக்குச் செல்லவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெர்லின் உலகளாவிய விவாதத்தில் பங்கேற்பதற்காகச் செல்லவுள்ள ஜனாதிபதி, அந்த மாநாட்டில் 02

## புல்மோட்டையில் பிக்கு அடாவடி!

### மக்களுக்குப் பகிரங்க அச்சுறுத்தல்



(அப்துல் சலாம் யாசீம்)

திருகோணமலை, புல்மோட்டையில் முஸ்லிம் மக்கள் விவசாயம் மேற்கொண்டு வந்த காணிகளை பூஜா பூமி எனும் பெயரில் 02

## யாழில் பால் புரையேறி ஆண் குழந்தை மரணம்

- எஸ்.நிதர்ஷன் -

பால் புரையேறி மூன்று மாத ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கிருஷ்ணகுமார் கரிஹரன் என்ற 02

### மீசாலை வடக்கில் அதிகாலை வேளை

## ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் சாவு



- த.சுபேசன் -

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை வடக்குப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து 02




தியாக தீபம் திலீபனின் நினைவு எழுச்சி நாள்களின் கடைசித் தினம் நாளை. திலீபன் கடைசி மூச்சு விட்ட தினத்தின் நினைவு நாள்.

அந்த தற்கொடை ஈகத்தின் நினைவை மக்கள் எழுச்சியாக்குகின்றோம் என்ற பெயரில் கட்சி வளர்க்கவும் வாக்குகளைச் சுருட்டவும் போட்டியிடுகின்றனர் என்றே படுகின்றது.

திலீபன் தன்னை ஆகுதியாக் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிய போது அதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்த பலர் இருந்தும், நேற்று வந்த பலர் ஏதோ திலீபனும் அவனது தியாகமும் தமக்கு மட்டுமே உரிய நினைவெழுச்சிக்கு உரியவை என்று தனி பாத்தியம் கொண்டாடுவது சகிக்கப் பொறுக்கவில்லை.

திலீபன் உண்ணாவிரதம் இருந்தது நல்லூர் கோவில் வீதியிலே. அவன் உயிர் பிரிந்ததும் அங்குதான். அங்கு நினைவிடம் அமைக்க முடியாது என்பதால், நல்லூர் வீதிக்கு அருகில், இப்போது இருக்கும் நினைவிடத்தைத் தெரிந்து, முடிவு செய்து, அதை ஸ்தாபித்தவர் ஒருவர்தான். யாழ் மாநகர சபை ஆணையாளராக இருந்த சி.வி.கே.சிவஞானம். தற்போதைய வடக்கு மாகாண அவைத் தலைவர். யாழ். மாநகர சபை ஆணையாளர் என்ற பதவி நிலையைப் பயன்படுத்தி, மாநகர சபைக்கு உரிய இடத்தில் தூபி அமைக்க முடிவு செய்து, அனுமதித்தவர் அவரே. அது மாத்திரமல்லர். அந்த இடத்தில் முதன் முதலில் தூபி அமைத்தவரும் அவர்தான். அதுவும் கூட தனது சொந்தச் செலவில் அமைத்தவர். அதற்காக ஒரு சில நாள்களில் துப்பாக்கிச் சூட்டு தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. மோசமான காயங்களுடன் தெய்வாதீனமாக அவர் உயிர் பிழைத்தார்.

இன்றும் கூட, திலீபன் நினைவு நிகழ்வுக்கு யாரோ வேற்று - மூன்றாம் - ஆள் போல வரிசையில் வந்து நின்று, அவர் அஞ்சலித்துப்போவதை பார்க்க - அவரைப் புறமொதுக்கி, நேற்று முளைத்த புற்றீசல்கள் ஆலாபரணம் பண்ணுவதை பார்க்க - எரிச்சல் வருகின்றது.

இந்தியப் படையின் காலத்தில் திலீபன், மாத்தையா உட்பட புலிகளின் தளபதிகளுடன் நெருங்கி ஊடாடியவர் ஆணையாளர் சிவஞானம். புலிகள் - இந்திய அமைதிப்படைகள் யுத்தம் வெடித்த போது வடக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதி போல இந்தியப் படையுடன் உறுதியுடன் ஊடாடியவர் அவரே. அதற்கு நாம் சாட்சிகள். அவரைப் புறமொதுக்கி, நேற்று முளைத்த காளான்கள், திலீபன் நினைவெழுச்சியை கட்சி வளர்ச்சிக்கான போட்டியாக ஆரவாரப் படுத்துகின்றன.

திலீபன் காலத்திலேயே திலீபனாலும் ஏனைய போராளிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்ட மூத்த போராளியான காக்கா அண்ணனை மிஞ்சியவர்கள் தாங்கள் என்று மேலாண்மை காட்டுபவர்கள் முன் நிற்கின்றனர். முன்னாள் போராளிகள் கூட மதிக்கப்படுபவர்களாக இல்லை.

கீரைக் கடைக்கு எதிர் கடை போடுபவர்கள் போல நினைவுப் பந்தலுக்கு போட்டியாக எதிர்ப்பந்தல் போட்டு, போட்டி பண்ணுகின்றார்கள். நாளை இறுதி நாள் நிகழ்வில் என்ன அட்டகாசம் பண்ணப் போகின்றார்களோ, ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். மீண்டும் ஈகைச்சுடர் தூக்கி வீசப்பட்டு, மதிக்கப்பட வேண்டியவர்கள் மிதிக்கப்படும் 'சைக்கிள் ஓட்டங்கள்' அரங்கேறுமோ தெரியவில்லை.

இதற்கிடையில் முன்னாள் போராளி ஒருவர் காதில் கடித்து வைத்த விடயத்தையும் கூறி வைப்பது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

1987-09-15இல் உண்ணாநோன்பை ஆரம்பித்து 1987-09-26 இல் மரணத்தைத் தழுவிய தியாக தீபத்தின் உடல் அவரின் விருப்பப்படி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதை ஒட்டி நிகழ்ந்த இடப் பெயர்வின் போது கிளிநொச்சிக்கு அது எடுத்துச் செல்லப்பட்டது. 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி நோக்கி இராணுவம் முன்னேறியபோது, உடல் முத்தையன்கட்டில் இருந்த மருத்துவப்பிரிவு முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 1998 ஆம் ஆண்டு கிளிநொச்சியைப் புலிகள் மீட்டதும் கிளிநொச்சிக்கு மீள எடுத்து வரப்பட்டது.

அது அறிவியல் நகரில் புலிகள் கட்டிய பல்கலைக்கழகம் அருகே ஓர் தனி இடம் அமைக்கப்பட்டு அங்கே பராமரிக்கப்பட்டது.

2000-04-21 அன்று மாத்தளன் பகுதியை இராணுவம் கைப்பற்றியபோது அதன் அருகே ஓர் இடத்தில் அது மண்ணில் விதைக்கப்பட்டது.

தற்போது அந்தப் புகழுடல் இருந்திருந்தால் 'அதனை யாரு வச்சிக்குறது?' என அரசியல் கட்சிகள் அடிபட்டிருப்பார்கள், நல்லவேளை அதற்கு இடமளிக்காமல், அதற்கு முன்பே விதைத்து விட்டனர் என வெதும்பியபடி கூறினார் அந்த முன்னாள் போராளி.

## ரயிலுடன் மோதுண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காங்கேசன்துறை நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதுண்டே அந்தப் பெண் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.15 மணியளவில் மீசாலைக்கும் - புத்தூர் சந்திக்கும் இடைப்பட்ட ரயில் பாதையில் இடம்பெற்றுள்ளது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 67 வயதான கி.நாகேஸ்வரி என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அந்தப் பெண் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கிணற்றில் இருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்றுமுன்தினம் வீட்டில் இருந்து புறப்பட்ட நிலையில் வீட்டுக்குத் திரும்பவில்லை. இந்நிலையில், அவரைத் தேடிச் சென்றபோது, நேற்றுக் காலை தோட்டக் கிணற்றினுள் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

## நினைவேந்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் மக்கள் மீண்டுமொரு போரை விரும்பவில்லை. விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்வது அவர்களின் நோக்கம் அல்ல. அவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியாக நடத்தினால் நாம் அதற்கு இடமளிக்க வேண்டும்.

திலீபன் நினைவேந்தல் நிகழ்வால் இன மோதல் ஏற்படும் என்று தவறான கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் எவரும் பரப்பக்கூடாது.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் வடக்கு - கிழக்கு மக்கள் அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தினார்கள். தற்போதைய ஆட்சியிலும் அவ்வாறான நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் நடத்தத் தடை போட முடியாது.

ஆனால், இவ்வாறான நிகழ்வுகள் மூலம் தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபம் தேட முற்படக்கூடாது. சிங்கள மக்களை வெறுப்பேற்றும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது.

மூவின அரசியல்வாதிகளும் மூவின மக்களின் உறவுப் பாலமாகத் திகழ வேண்டும்." - என்றார்.

## யாழில் பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் நேற்றுக் காலை குழந்தைக்குப் பாலூட்டியுள்ளார். இதன் போது குழந்தை அசைவற்று காணப்பட்டது.

இந்நிலையில், குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை, குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

பால் புரையேறியே குழந்தை இறந்தது என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

## புல்மோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பௌத்த பிக்கு ஒருவர் துப்பரவு செய்ததால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

புல்மோட்டை, வீரந்தீவு எனப்படுகின்ற பகுதியில் முஸ்லிம் மக்கள் விவசாயம் செய்துவந்த விவசாய காணிகள் அரிசிமலை பிக்குவான பனாமுரே திலக வங்ஷ நாயக்க தேரரால் டோசர் இயந்திரங்களைக் கொண்டு துப்பரவு செய்யப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை தோன்றியது.

அந்தக் காணி தமது விவசாய காணி என முஸ்லிம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்த நிலையில் அக்காணி பௌத்த விகாரைக்குரிய காணி என புத்த பிக்குவால் குறிப்பிட்டதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது மக்கள் டோசர் இயந்திரத்தின் மீது ஏறி எதிர்ப்புத் தெரிவித்த போது இயந்திரத்தின் சாரதி டோசர் இயந்திரத்தை இயக்கியதால் பெண் உட்பட இருவர் காயமடைந்தனர்.

அண்மைக்காலமாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பூஜா பூமி எனும் பெயரில் தமிழ், முஸ்லிம் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன என்று மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

428 சதுர கிலோமீற்றர் பரப்புடைய குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் அண்ணளவாக 27 ஆயிரத்து 957 முஸ்லிம் மக்களும், 13 ஆயிரத்து 639 தமிழ் மக்களும், 981 சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்ற நிலையில் இப்பகுதியில் 30 இற்கும் மேற்பட்ட விகாரைகளுக்கான காணிகள் ஒதுக்கப்பட்டு கட்டுமானங்கள் இடம்பெற்று வருகின்றன. இதைவிட மக்களுடைய பாரம்பரிய காணிகளும் பூஜா பூமி எனும் பெயரில் அத்துமீறி கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது என அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## ஜனாதிபதி நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாற்றவும் உள்ளார்.

தற்போதைய புவிசார் அரசியல் மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கு உலகளாவிய தீர்வுகளைக் கண்டறிவதற்கான பெர்லின் உலகளாவிய விவாதம் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்க விஜயங்களை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான முதலாவது மீளாய்வுக்கான இறுதிக் கலந்துரையாடலும் நாளை ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தியாகி திலீபனின் நினைவு ஊர்திக்கு வடமராட்சியில் மக்கள் திரண்டு அஞ்சலி

(வடமராட்சி நிருபர்)

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்திக்கு வடமராட்சியின் நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுன்தினம் பகல் வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியில் இருந்து ஆரம்பித்த திலீபனின் நினைவு ஊர்தி நேற்றுமுன்தினம் மாலை 6:30 மணியளவில் நெல்லியடியை வந்தடைந்தது. தொடர்ந்து பருத்தித்துறை ஊடாக இன்பருட்டிக்குச் சென்றது.

நெல்லியடி, பருத்தித்திறை பகுதியில் மக்கள் மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இன்பருட்டியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.







# கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்காக சீன அரசின் உதவியுடன் வீட்டுத் திட்டம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும் 1,996 வீட்டு அலகுகள் குறித்த ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் பி.ஆர்.ஐ. உச்சிமாநாட்டின் போது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று அமைச்சும் அறிவித்துள்ளது.

1996 வீட்டு அலகுகளில் நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பழதுறு வத்த பகுதியில் வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1,888 வீடுகள் ஒதுக்கப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக சீன அரசாங்கம் இலங்கைக்கு 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்கவுள்ளது.

இந்த திட்டத்துக்காக செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, டெண்டர் பணிக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான பரிமாற்றக் கடிதத்தில்



சீன மக்கள் குடியரசும் இலங்கை அரசும் கடந்த ஜனவரி 9 ஆம் திகதி கைச்சாத் திட்டுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம் குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வசிப்பவர்களின் குடியேற்றப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்துப் பாதிப்பு; இடைக்கால இழப்பீட்டுத் தொகை கிடைத்தது

‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்திற்கான இடைக்கால இழப்பீட்டுத் தொகை நாட்டிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 878,650.53 அமெரிக்க டொலர் இடைக்கால இழப்பீடாக கிடைக்கப்பெற்றுள்ளது.

எஞ்சிய 16 மில்லியன் ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையானது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் செலவுகளுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

கப்பல் நிறுவனத்திற்கான காப்புறுதி நிறுவனத்துடன், அண்மையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய இந்த இடைக்கால இழப்பீட்டுத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காகவும் இழப்பீடு கோரப்பட்டுள்ளது என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த காப்புறுதி நிறுவனம் ஆராய்ந்து வருவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# நிதிக்குற்ற வழக்கு விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றம் அமைப்பது அவசியம்

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

நிதிக்குற்ற வழக்கு விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான நிதி மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி குறித்த தேசிய இடர் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முறைசாரா வகையில் பணம் அனுப்புதல், உண்டியல் முறைமை என்பன நாட்டில் பண மோசடி செய்யும் அபாயகரமான முறைகளாக மாறியுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள பண மோசடி முறைகளில் ரியல் எஸ்டேட் முகவர்கள், வங்கித்துறை மற்றும் நிதி நிறுவனங்கள் இரண்டாவது இடத்தில் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பண மோசடி என்பது நிதி சொத்துகளை சட்டவிரோதமாகப் பெறுதல் மற்றும் சம்பாதிக்கப்பட்ட முறைமை என்பவற்றை வெளியிடாமல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கி தனது அண்மைய அறிக்கையில் பண மோசடி தடுப்பு தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மதுபான போத்தல்கள் ஏல விற்பனை

சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 18 ஆயிரத்திற்கும் அதிக மதுபான போத்தல்களை ஏலத்தில் விற்பனை செய்ய இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது.

வருடத்தின் ஆரம்பம் முதல் சேகரிக்கப்பட்ட சட்டவிரோத மதுபான போத்தல்கள், அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இவை சுங்க வருமான கண்காணிப்பு பிரிவினால் ஏல நடவடிக்கை உட்படுத்தப் படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல்களை மதுவரி திணைக்களத்துடன் சுங்கத் தரப்பு ஆரம்பித்துள்ளது என அவர் கூறியுள்ளார்.

ஏலத்திற்கு விடப்படவுள்ள சட்டவிரோத மதுபான போத்தல்கள், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் கண்காணிப்பிற்கு உட்படுத்தப் பட்டவை என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலை மாவட்ட மீன்பிடித் தடை குறித்து ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வலியுறுத்து



**“கிழக்கு மாகாண ஆளுநர் திருகோணமலை மாவட்ட மீன்பிடித் தடை குறித்து எடுத்த ஒருதலைபட்சமான முடிவு இம்மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

கடந்த சில தினங்களாக திருகோணமலை மாவட்ட மீனவக் குழுக்களுக்கிடையில் நிலவும் முறுகல் நிலை தொடர்பாகவும், அது தொடர்பில் ஆளுநர் எடுத்த தீர்மானம் குறித்தும் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

“சுருக்குவலையைப் பொறுத்தவரையில் அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வகையான சுருக்கு வலைகள் உள்ளன. இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் உள்ளது.

இதில் சட்ட ரீதியாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலை மூலம் கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்றபிரதேசங்களைச்சேர்ந்த5ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

எனினும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலைக்கும் அனுமதிப் பத்திரம் வழங்க முடியாத சுருக்கு வலைக்கும் வித்தியாசம் அறியாமல் ஆளுநர் தற்போது சுருக்கு வலை என்பது சட்ட விரோதமான ஒன்று என்ற நோக்கில் எடுத்த ஒருதலைபட்ச முடிவு திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியாக உள்ளது.

இங்கு இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாகவே முறுகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இரு பக்க நியாயங்களையும் கேட்ட பின்பே தீர்மானத்துக்கு வர வேண்டும்.

ஆனால், கிழக்கு மாகாண ஆளுநர் இதில் ஒரு குழுவினரின் கருத்தைக் கேட்டே இந்த மீன்பிடித் தடை தீர்மானத்துக்கு வந்துள்ளார். இது குறித்து அவரை நேரில் சந்தித்து விடயத்தைத் தெளிவுபடுத்த பல தடவைகள் முயற்சித்த போதும் அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை மீன் நுகர்வில் 50 வீதத்துக்கு அதிகமானவை சுருக்கு வலை மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றது. சாதாரண மீனவக் குடும்பங்கள் இந்தத் தொழிலிலேயே தங்கியுள்ளன.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்தில்கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் இரண்டு தரப்பு நியாயங்களையும் கேட்டறிந்துபூரணதகவல்களைப்பெற்றபின்னர், நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நியாயமானதாக இருக்கும்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை இந்த மீனவக் குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து ஆளுநர் மீள்பரிசீலனை செய்து, உடனே நியாயமான தீர்மானத்துக்கு வர வேண்டும். இன்றேல், எதிர்காலத்தில் பாரிய மக்கள் எதிர்ப்பு ஒன்றைச் சந்திக்க நேரிடும்.” – என்றார்.

# ரணிலை எதிர்ப்பவர்களை வளைக்க நிமால் லான்சா அணியினர் முயற்சி

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு வரும் கூட்டமைப்பு அடுத்த கட்டத்தை நோக்கிப் பாய்கின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் யாரெல்லாம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்களோ அவர்களை வளைத்துப் போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது அந்தக் கூட்டமைப்பு.

கடந்த வாரம் இந்தக் கூட்டமைப்பின் ஸ்தாபகர்நிமால்லான்சாவை நாடாளுமன்றில் சந்தித்து உரையாடிய மொட்டுக் கட்சி எம்பிக்களிடமே லான்சா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.



# இலங்கையில் நிபா வைரஸ் அபாயம்;

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

பல நாடுகளில் பரவி வரும் நிபா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்க துறைமுகத்திலோ அல்லது விமான நிலையத்திலோ பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை என பொதுப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்த வைரஸ் தெரிந்தோ தெரியாமல் நாட்டுக்குள் தற்போது நுழைந்திருக்கலாம் என சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கு துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் எந்த வகையிலும் பாதுகாப்பு நடைவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாட்டிற்குள் வந்திருக்கலாம்.

கடற் பிரஜைகளுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்கின்றார்கள், பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்கின்றார்கள், போதை பொருள் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இதுவரையில் நாட்டிற்குள் நிபா வைரஸ் நுழைந்திருக்கலாம். நுழையும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இதனால் வைரஸ் நாட்டில் இல்லை என யாரும் நினைக்க வேண்டாம். ஏற்கனவே பரவியிருப்பதற்கும் வாய்ப்புகள் அதிகளவில் உள்ளன.

நிபா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கு பரிசோதனை முறையை வலுப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று பொது பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆப்பிழுத்த நிலையில் ரணில்!

ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு உள்ளாகி இருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எதிர்பாராமல் கிடைத்த இரண்டரை ஆண்டு கால ஜனாதிபதிப் பதவியைப் பயன்படுத்தி அடுத்த இன்னொரு ஐந்து ஆண்டு காலம் ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பலவும் வெற்றியளிக்கப் போவதில்லை என்ற யதார்த்தம் இப்போது புரிய ஆரம்பித்திருப்பதால், மீண்டும் ஜனாதிபதிப் பதவிக்கு இலக்கு வைத்துத் தேர்தலில் நிற்கும் திட்டத்தை கைவிடுவது குறித்து அவர் இப்போது பரிசீலிக்கின்றார் எனக் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இரண்டு தடவைகள் - 1999 இலும், 2005 இலும் - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் ரணில் விக்கிரமசிங்க. இரண்டு தடவைகளும் தமிழர் தரப்பில் புலிகள் எடுத்த நடவடிக்கைகளால் அவர் மண் கவ்வினார்.

1999 தேர்தலில் அப்போது மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா குமாரதுங்கவை இலக்கு வைத்துத் தேர்தல் சமயத்தில் புலிகள் நடத்திய தாக்குதல் ரணிலைத் தோல்விக்கு இட்டுச் சென்றது. சந்திரிகாவுக்கு வெற்றி வாய்ப்பைத் தேடித்தந்தது.

2005 ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு, கிழக்கு தமிழர்களை வாக்களிக்காமல் பகிஷ்கரிப்பதற்கு புலிகள் கொடுத்த நிர்ப்பந்தத்தால் ரணில் தோற்க வேண்டியவரானார். மஹிந்த ராஜபக்ஷ வென்றார்.

2010 இலும், 2015 இலும் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காக அவர் தமது வேட்பாளர் நியமனத்தையே பொது வேட்பாளர்களாகிய சரத் பொன்சேகா மற்றும் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தாரை வார்த்து விட்டுக் கொடுக்கும் கட்டாயத்துக்கு உள்ளானார்.

2019 தேர்தலில் அவர் தலைமை வகித்த ஐக்கிய தேசியக் கட்சியே அவருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்காமல் காலை வாரியது. அந்த நியமனம் அவரின் கண் முன்னாலேயே சஜித் பிரேமதாஸவுக்குப் பறிபோனது.

இப்படி கால் நூற்றாண்டு காலம் ஜனாதிபதி தேர்தல் என்றாலே ரணிலுக்கு துரதிர்ஷ்டம் என்ற நிலைமை தான் தொடர்கின்றது.

கடந்த ஆண்டு பின் கதவால் நாடாளுமன்றம் மூலம் ஜனாதிபதியாகும் வாய்ப்பே அவருக்குக் கிட்டியது.

அதை வைத்துக்கொண்டு 2024 ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி வென்று விடலாம் என்று நப்பாசைப்பட்டவருக்கு அந்தத் தேர்தலும் கூட காலையே வாரிவிடும் என்ற புரிந்துணர்வு இப்போது ஏற்பட்டு வருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி அவரை ஆதரிக்கப் போவதில்லை என்பது இப்போது அவருக்கு நன்கு புரிய ஆரம்பித்து இருக்கின்றது. அதோடு மொட்டுக் கட்சியை நம்பிக் களமிறங்கினாலும் வெல்ல முடியாது என்று யதார்த்தமும் அவருக்குப் புரியத் தொடங்கியுள்ளதாம். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளந்து தமது ஐக்கிய தேசியக் கட்சியை வலிமைப்படுத்தும் அவரின் ஆசையும் முன் நகர்வதாகத் தெரியவில்லை. மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இருந்து பிரிந்தவர்களை வைத்துத் தனிக் கூட்டணி ஆரம்பிக்கும் அவரது எத்தனமும் சாதகமாக அமைவதாக இல்லை. போதாக்குறைக்கு தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என சிறுபான்மைத் தரப்பினரிடமிருந்து அவருக்கென கிடைத்து வந்த தனித்துவ ஆதரவும் இப்போது குறைந்து வருவதாக அவர் உணர்ந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

அடி சறுக்குவது ரணிலுக்கு இப்போது புரியத் தொடங்கி இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. அது நல்லதுதான்.

## கொழும்பில் ஆணின் சடலம்!

கொழும்புத் துறைமுக நகரின் கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்புத் துறைமுகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் கண்டறியப் படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் 40 முதல் 45 வயதுடையவர் எனவும், 5 அடி 8 அங்குலம் உயரம் கொண்டவர் எனவும், நீண்ட நீல நிற டெனிம் அணிந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## ரயில் பயணப் பருவச்சீட்டுகளை ரத்துச் செய்வதற்கு யோசனை!

எதிர்வரும் காலங்களில் ரயில் பருவச்சீட்டை ரத்து செய்வதற்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்திற்கும் போக்குவரத்து அமைச்சுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரயில்வேத் திணைக்களம், அதிகார சபையாக மாற்றப்பட்டால் மாத்திரமே, இந்த யோசனை நடைமுறைக்கு வரும் என ரயில்வேத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் ரயில்வே பருவச்சீட்டை ரத்துச் செய்வது தொடர்பிலான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ரயில் பருவச்சீட்டினை ரத்துச் செய்வதன் மூலம் ரயில்வேத் திணைக்களத்திற்கு இலாபம் கிடைக்கும் எனவும் அந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வேத் திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் யோசனையுடன், இந்தியாவின் முன்னணி வர்த்தகர்கள் ரயில் சேவையில் முதலிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## குடும்ப சுகாதார சேவை அலுவலர் வெற்றிடங்கள்

நாட்டில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது என அரசாங்க குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைத்த அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இதன்காரணமாக தாய், சேய் சுகாதாரம் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பெரும்போகத்தில் 13 வகையான போகப் பயிர்களை பயிரிட முடிவு

எதிர்வரும் பெரும்போகத்தில் 13 வகையான போகப் பயிர்களை பயிரிட இணக்கம் காணப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள போகப் பயிர்கள் தொடர்பான தலைவர்கள் மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு இடையே அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நெல், சோளம், மிளகாய், உருளைக்கிழங்கு, சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், பயறு, கௌப்பி, சோயா, போஞ்சி, குரக்கன், கொண்டைக்கடலை, உளுந்து, நிலக்கடலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கே இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்தில் நெல் அறுவடை மேற்கொள்ளப்படும் வரை, தேவையான அரிசி மற்றும் நெல் தொகை நாட்டில் காணப்படுகின்றது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# மதுபான விருந்தில் மோதல் ஒருவர் அடித்துப் படுகொலை

அநுராதபுரம், சீப்புக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் சிலர் கலந்து கொண்ட மதுபான விருந்தின்போது நபர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம்நள்ளிரவுவிருந்தின் போது மோதல் ஏற்பட்டிருந்த நிலையில் பாதிக்கப்பட்டவர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட பின்னர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரர் உள்ளிட்ட சிலர் மதுபான விருந்தை ஏற்பாடு செய்திருந்த நிலையில், அதில் கலந்து கொண்ட இருவரே இந்தக் கொலையைச் செய்துள்ளனர்.

இருவரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாகாணத்தின் அதிகாரம் மத்திக்கு செல்வதை அனுமதிக்க முடியாது!

## வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்து



மாகாண அதிகாரம் மத்திக்கு செல்வதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அத்தகைய ஏற்பாட்டுக்கு வடமாகாண ஆளுநர் உடந்தையாக இருக்கக் கூடாது என வட மாகாண சபை அவை தலைவர் சி.வி.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய ஆளுநரின் பதவியேற்புக்கு நான் சென்ற நிலையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதை நான் பொருட்படுத்தவில்லை.

மக்கள் பிரதிநிதியாக அந்த நிகழ்வுக்கு சென்றமை சரி என்பதே எனது நிலைப்பாடு.

இவ்வாறான நிலையில் வட மாகாண ஆளுநர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரை வட மாகாண சுகாதார பணிப்பாளராகத் தொடர்வதற்கு சமிக்ஞை காட்டுகிறார் என ஊடகங்கள் மூலம் அறிந்தேன்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்திக்கும் எமக்கும் பிரச்சினை இல்லை. ஆனால், மத்திய அரசின் அதிகாரியாக இருக்கும் சத்தியமூர்த்தி மாகாண அதிகாரத்தை பயன்படுத்த முடியாது.

விரும்பினால், மத்திய அரசின் பதவி நிலைகளைக் கைவிட்டுவிட்டு மாகாண அதிகாரத்தின் கீழ் பதவி நிலைகளை வகிக்க முடியும்.

வட மாகாண ஆளுநர் மாகாண அதிகாரத்தை மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கும் சத்தியமூர்த்திக்கு வழங்குவது தொடர்பில் சாதகமாக நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார் என அறிய முடிகிறது.

நான் ஆளுநரின் பதவியேற்புக்கு சென்றதன் பின் இன்று வரை அவருடன் பேசியது இல்லை.என்னுடைய வேலைகளை நான் பார்க்கிறேன் அவருடைய வேலைகளை அவர் பார்க்கிறார்.

ஆகவே மாகாண அதிகாரத்தை மத்திக்கு விட்டுக்கொடும் நிலைப்பாட்டில் ஆளுநர் செயல்படுவாராயின் அதனை அவர் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை எனது கருத்தாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். - எனத் தெரிவித்தார்.

# கொழும்பில் சிக்கிய 24 இளம் ஜோடிகள்!

கொழும்பு - ஹோமாகம நகரில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான பூங்கா ஒன்றில் சிறிய மூடிய அறைகளில் அநாகரிகமாக நடந்து கொண்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுவர்களை இலக்கு வைத்து இவ்வாறான முறைகேடான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று ஹோமாகம பொலிஸாருக்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது.

அதற்கமைய நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் 18 வயதுக்கும் உட்பட்ட 24 ஜோடிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பூங்காவுக்குச் செல்லும்போது மூடப்பட்ட சிறிய அறைகளில் பாடசாலை வயதுடைய சிறுவர்கள் அநாகரிகமாக நடந்துகொள்கின்றனர் என்று அப் பகுதியின் பெற்றோர்கள் மற்றும் மதத் தலைவர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தால் பெறப்பட்ட தேடுதல் உத்தரவுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட அனைத்து சிறுவர்களையும் அழைத்து, உண்மைகளை விளக்கி, அறிவுறுத்தல்களை வழங்கிய பொலிஸார், சிறுவர்களின் பாதுகாவலர்களுடன் தொடர்பை மேற்கொண்டு அவர்களை விடுத்துள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்தில் இருந்த சிறுவர்கள் பலர் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி அந்தப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கரில் காங்கிரஸின் வெற்றி நிச்சயம்!

## - ராகுல் காந்தியின் தேர்தல் கணிப்பு



மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் சட்டப்பேரவைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி நிச்சயமாக வெற்றி பெறும். தெலுங்கானாவில் வெற்றி பெறலாம். ராஜஸ்தானில் போட்டி நெருக்கமாக இருக்கிறது என்று காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர் ராகுல் காந்தி தெரிவித் துள்ளார்.

ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கருத்து தெரிவித்த ராகுல் காந்தி, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் சட்டப்பேரவைத் தேர்தல்களில் காங்கிரஸ் நிச்சயமாக வெற்றி பெறும். தெலுங்கா னாவில் வெற்றி பெற வாய்ப்புகள் உள்ளன. அங்கே பா.ஜ.கவின் செல் வாக்கு முற்றிலும் போய்விட்டது.

ராஜஸ்தானில் போட்டி நெருக்கமாக இருக்கிறது. வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்காக எதிர்க்கட்சிகள் ஒன்றி ணைந்து செயல்பட்டு வருகின்றன. அதனால் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆச்சரியம் காத்திருக் கிறது.

பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பிதூரியின் தரம்தாழ்ந்த விமர்சனம் எல்லாம் அவர் சார்ந்த கட்சியின் திசை திருப்பும் முயற்சி. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதும் மக்களின் உண்மையான பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பும் முயற்சியே.

இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளாக ஒருசிலரிடம் மட்டுமே செல்வம் குவிந்திருத்தல், மிகப்பெரிய அளவிலான வேலைவாய்ப்பின்மை, தாழ்த்தப்பட்ட மற்றும் இதர பிற்படுத் தப்பட்ட வகுப்பினர், பழங்குடியின சமூகத்தினருக்கு எதிரான அநீதி, விலைவாசி உயர்வு ஆகியன இருக் கின்றன.

இவற்றையெல்லாம் பா.ஜ.கவால் இப்போது எதிர்கொள்ள இயலாது. ஒரே நாடு ஒரே தேர்தல், இந்தியாவின் பெயரை மாற்றுதல் ஆகிய அனைத்துமே திசைதிருப்பும் முயற்சிதான். எங்களுக்கு அது புரியும். ஆனால் அவற்றைச் செய்ய நாங்கள் அவர்களை அனுமதிக் கப்போவதில்லை.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் ஒரு முக்கியமான பாடம் கற்றுக் கொண்டது. பா.ஜ.க. திசைதிருப்பும் முயற் சிகளாலேயே தேர்தல்களை வெல்கிறது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

இப்போதெல்லாம் நாங் கள் ஆக்கபூர்மான விஷயங்களை மக்கள் முன்னால் வைக்கிறோம். அது எங்களுக்கு வெற்றியைத் தருகிறது.

சாதிவாரி கணக்கெடுப்பை மக்கள் விரும்புகின்றனர். ஆனால் அதை பா.ஜ.க. விரும்பவில்லை. எப்போதெல்லாம் மிக முக்கியமான பிரச்சினையை விவாதிக்க முயற்சிக்கிறோமோ அப்போதெல்லாம் அவர்கள் இதுபோன்ற சர்ச்சைகளை உருவாக்குவார்கள். பா.ஜ.கவுக்கு 2024 மக்களவைத் தேர்தலைப் பார்த்து அச்சம்வந்துவிட்டது.

இந்திய ஒற்றுமை யாத்திரை ஏன் அவசியம் என்பதை அதன் முதல் பகுதியில் உணர்ந்து கொண்டேன். எதிர்க்கட்சிகள் என்ன சொன்னாலும் அது தேசிய ஊடகங்களில் திரித்துச் சொல்லப்படுகின்றன.

அதற்கு பா.ஜ.க. அழுத்தம் காரணமாக இருக்கிறது. ஆனால் எல்லா அழுத்தங்களையும் முறியடிக்கும் வகையில் நாங்கள் மக்களை நேரடியாக சந்தித்தோம் என்று தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. தமிழகத்தில் கட்டுப்பணம் இழக்கும்!

## - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை



வாக்குறுதிகளை காப்பாற்றாத பா.ஜ.கவை, தமிழகத்தில் கட்டுப்பணம் கூட வாங்க விடக்கூடாது என மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறை கூட்டத்தில் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட மாவட்டங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறை கூட்டம் திருப்பூர் மாவட்டம் காங்கயம் படியூர் தொட்டியபாளையத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சியானது தி.மு.கவின் மாநாடு போல் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. இதில் பங்கேற்று உரையாற் றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகத் தில் ஏதாவது ஒரு விதத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் ஆட்சியை தி.மு.க. நடத்தி வருகிறது.

தேர்தல் வாக்குறுதியில் மிகப்பெரியது கலைஞர் உரிமைத் தொகை திட்டம். அது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் பலமடங்கு வரவேற்பு நமக்கு கிடைக்கிறது. கட்டணமில்லா பேருந்து திட்டத்திலும் பெண்கள் பயன்பெற்றுள்ளனர். நகைக்கடன் தள்ளுபடி, காலை உணவுத்திட்டம் என, தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத் திலும் நேரடியாக 3 ஆயிரம் ரூபா முதல் 4 ஆயிரம் ரூபா வரை மாதம் பயன்பெறுகிறார்கள்.

ஆனால் மத்தியில் 2 ஆவது முறையாக ஆளும் மோடி அரசு, 3 ஆவது முறையாக வர ஆசைப்படுகிறார்கள். அவர்கள் வரக்கூடாது. கொள்ளை அடிக்கும் அரசாக மத்திய பா.ஜ.க. அரசு உள்ளது. விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்கு வோம், ஆண்டுக்கு 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தரப்படும் என மோடி சொன்னார். இவற்றையெல்லாம் செய் தாரா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# நிரந்தர வதிவிட உரிமையை கோரி ஆஸியில் பெண்கள் நடைபயணம்!




அவுஸ்ரேலியாவில் அகதி தஞ்சம் அடைந்துள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமையை அளிக்க வேண்டும் எனக் கோரி ஏராளமான பெண்கள் நீண்ட நடை பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தமது நாட்டிற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டால், தங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை எனக் கோரி அவுஸ்ரேலியாவின் தஞ்சமடைந்துள்ளோர். அங்கு தமக்கு நிரந்தரமாக வசிக்கும் உரிமை வேண்டும் எனக் கோரி போராடி வருகின்றனர்.

அவர்கள் அகதிகளாக இருந்தாலும், நிரந்தர குடியுரிமை விடயத்தில் அவுஸ்ரேலிய அரசு தம்மை தொடர்ந்தும் ஒரு ஸ்திரமற்ற நிலையிலேயே வைத்துள்ளது என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தமக்கு நிரந்தரமாக அவுஸ்ரேலியாவில் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்பட வேண்டுமென அவர்கள் மெல்பேர்ன் நகரிலிருந்து தலைநகர் கன்பரா வரையிலான 650 கிலோமீற்றர் தூரத்திற்கு பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் நடந்து செல்லும் பயணத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

மகளிரால் மட்டுமே முன்னெடுக்கப்படும் இந்த போராட்டம், கடந்த வெள்ளிக்கிழமை குடிவரவு, குடியேற்றம், குடியுரிமை மற்றும் பல்கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அண்டூர் ஜைல்ஸ்ஸின் அலுவலகத்தின் முன்றலில் இருந்து ஆரம்பமானது. மிகவும் வலுவாக தமது ஒற்றுமை மற்றும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலான இந்த பேரணியில், அகதி தஞ்சம் கோரியுள்ள பல்வேறு சமூகத்தினர் இணைந்துள்ளனர்.

அவர்கள் அவுஸ்ரேலிய ஜனநாயகத்தின் தலைமையிடமான நாடாளுமன்றம் அமைந்துள்ள கன்பெரா நகரை நோக்கி பயணிக்கின்றனர்.

## போலியான ஆயுதங்களைக் காட்டி ரஷ்ய படைகளை மிரட்டியது உக்ரைன்!



உக்ரைன் போலியான ஆயுதங்களைக் காட்டி ரஷ்ய வீரர்களை மிரட்டியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் பகுதிக்குள் அத்துமீறி முன்னேறும் ரஷ்ய வீரர்களை தடுத்து நிறுத்துவதற்காக இரும்பு, பழைய மரம், டயர்கள் போன்றவற்றை கொண்டு போலியான ஆயுதங்களை தயாரித்து போலி ஆயுத குவியல்களை உக்ரைன் வீரர்கள் வைத்துள்ளனர்.

இவ்வாறு வைக்கப்பட்ட போலி ஆயுதங்களை ஆயுதக்குவியலாக நினைத்து திடீரென ரஷ்யா பின்வாங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் பல வீரர்களின் உயிர்களும் காப்பாற்றப்பட்டுள்ளன எனவும் தங்கள் உத்தி போரில் கைகொடுத்துள்ளது என்றும் உக்ரைன் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ரஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவின் செவாஸ்டோபோலில் உள்ள கருங்கடல் கடற்படை தலைமையகத்தை உக்ரைன் ஏவுகணைகள் தாக்கியுள்ளன.

இந்த தாக்குதலில் 9 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 16 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு: 3 பேர் பலி!

அமெரிக்காவின், ஜோர்ஜியா மாகாணத்தின் – அட்லாண்டா நகரில் அமைந்துள்ள வணிக வளாகம் ஒன்றுக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

திடீரென அடையாளம் தெரியாத மூவர் அந்த வணிக வளாகத்திற்குள் நுழைந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இதன்போது துப்பக்கிதாரிகளை நோக்கி வணிக வளாகத்திற்குள் இருந்த இருவரில் ஒருவரும் கைத்துப்பாக்கியை எடுத்து பதிலுக்கு சுட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 17 வயது சிறுவன் உள்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# செயலாளர் பதவியைக் கைப்பற்ற துமிந்த திஸாநாயக்க கடும் போட்டி

## சு.கவுக்குள் தொடர்கின்றது குழப்பம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்கு கடும் போட்டி இடம் பெற்று வருகின்றது. அதில் முன்னணியில் இருப்பவர் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க.

துமிந்த பொதுச்செயலாளராக இருந்தபோதுதான் கட்சிக்குள் அவருக்கு எதிராகப் பிரச்சினை ஏற்பட்டு அவரிடம் இருந்து பதவி பறிக்கப்பட்டு அது தயாசிறிக்கு வழங்கப்பட்டது.

இப்போது அந்தப் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்குத் துமிந்த முயற்சி செய்து வருகிறார் என்று அறிய முடிகின்றது.

இப்போது சு.கவின் தலைவர் மைத்திரியோடு துமிந்த நெருக்கமாக இருப்பதால் ஒருவேளை இது சாத்தியப்படலாம் என்கின்றது அக்கட்சி வட்டாரம்.




# கொழும்பு வைத்தியசாலையில் திருட்டில் ஈடுபட்டவர் சிக்கினார்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளை உள்ளடக்கிய சீன அரசால் உருவாக்கப்பட்ட புதிய அடுக்குமாடி கட்டடத்தில் பல்வேறு உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் தனியார் துப்புரவு நிறுவனம் ஒன்றின் பரிசோதகர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று வைத்தியசாலையின் பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மருதானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகிய காட்சிகளின் அடிப்படையிலான விசாரணையின்போது உரிய நபரை அடையாளம் காண முடிந்தது என்றும் வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

# பொலிஸ் அதிகாரியாக நடித்து இரத்தினக்கற்கள் கொள்ளை!

## 47 வயதுடைய நபர் கைது

கட்டுகஸ்தோட்டை– வட்டரந்தென்ன பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தராகத் தம்மை அடையாளப்படுத்தி பெறுமதியான இரத்தினக்கற்களைக் கொள்ளையிட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

47 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர், சுமார் 12 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களைக் கொள்ளையிட்டார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.





# தியாக தீபத்துக்கு சந்தோஷ் அஞ்சலி!

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்துள்ள இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்குத் தனது பாரியாருடன் சென்று அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்துள்ள சந்தோஷ் நாராயணன், மாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர்களை யாழில் உள்ள விருந்தினர் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்தோஷ் நாராயணனின் மனைவி யாழ்ப்பாணம் – கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவராவார்.



எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தோஷ் நாராயணன் பெரியளவிலான இசை நிகழ்வொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச. பஸ்ஸுக்குள் கத்திக்குத்து தாக்குதல்



## மக்கள் முன்னிலையில் ஒருவர் கடத்தல்

கம்பளை, மாவெல பகுதியில் இருந்து கண்டி நோக்கி இ.போ.ச. பஸ்ஸில் நேற்றுக் காலை பயணித்துக்கொண்டிருந்த நபர் ஒருவர் மீது பஸ்ஸுக்குள் வைத்து கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அதன்பின்னர் அவர் வானொன்றில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கம்பளை, றிவர்சைட் பகுதியில் வைத்து பஸ்ஸின் முன்கதவில் இருவரும், பின்கதவில் இருவரும் ஏறியுள்ளனர். அதன்பின்னர் பஸ்ஸுக்குள் இருந்த அந்த நபர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதன்பின்னர் கம்பளை, ஜயமாலபுர பகுதியில், வீதியின் குறுக்கே வானொன்றை நிறுத்திவைத்துவிட்டு அவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

சம்பவத்தையடுத்து பஸ் சாரதி, பஸ்ஸை கம்பளை பொலிஸ் நிலையத்துக்கு ஓட்டிச் சென்றுள்ளார்.

"மாவெலயில் இருந்து கண்டிக்கு அதிகாலை 5.15 மணிக்குச் செல்லும் பஸ்ஸில்தான் கடத்தப்பட்ட நபர் வந்துள்ளார்" – என்று அவரின் உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாரதியாகப் பணியாற்றிய ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார் எனக் கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட நபரின் அண்ணனின் மகன் ஒருவரால்தான் இவர் கடத்தப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# முறிந்து விழும் நிலையில் மின் கம்பங்கள்; 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அச்சத்தில்

பசறை, எல்டப் கிக்கிரிவத்தை, 18 ஆவது லயன் குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள மின்கம்பங்கள் முறிந்து விழும் அபாயகரமான நிலையில் காணப்படுகின்றது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் உள்ள இரண்டு மின்கம்பங்களை மாற்றித் தருமாறு கடந்த பல மாதங்களுக்கு முன் பசறை மின்சார சபையிடம் தாம் கோரிக்கை விடுத்ததாகவும், ஆனால் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த மின்கம்பங்கள் முறிந்து லயன் குடியிருப்பின் மீது விழுமேயானால் பாரிய சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், சுமார் 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படையக் கூடும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி அந்த மின்கம்பங்கள் இரண்டையும் மாற்றித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குடித்து கும்மாளம் மடூல்சீமையில் வழுக்கி விழுந்து இருவர் படுகாயம்

மடூல்சீமை – எலமான் பகுதியில் அமைந்துள்ள சிறிய உலக முடிவு பகுதிக்கு அருகாமையில், பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மது அருந்திக் கொண்டிருந்த ஐவர் அடங்கிய குழுவினரில் இருவர் பள்ளத் தாக்கில் வழுக்கி விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவர் தனது 25 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக மடூல்சீமை, எலமான் சிறிய உலக முடிவு பகுதிக்கு அருகாமையில் சானுவ பகுதியில் தனது நண்பர்கள் சகிதம் மது அருந்திக் கொண்டிருந்த வேளை கற்பாறையில் இருந்து வழுக்கி விழுந்துள்ளார்.

அவரைக் காப்பாற்றச் சென்ற மற்றைய நபரும் விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த இருவரும் 25 வயதுடைய பசறை பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை மடூல் சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# தங்கம் வெல்லுமா இலங்கை?

## இந்தியாவுடன் இன்று 'ரி-20' இறுதியாட்டம்



ஆசிய விளையாட்டுப்போட்டிகளின் பெண்கள் இருபது-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்துக்கு இலங்கை மற்றும் இந்திய அணிகள் தெரிவாகியுள்ளன. இதன் இறுதியாட்டம் இலங்கை நேரப்படி இன்று காலை 11 .30 மணிளளவில் சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெறவுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவில் நடைபெற்று வருகின்றன.

இதன் பெண்கள் இருபது-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் நேற்று (24) நடைபெற்றன.

முதலாவது அரையிறுதியில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 17.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 51 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

பின்னர் 52 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்தியா, 8.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 52 ஓட்டங்களைச் சேர்த்து 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றிமூலம் இறுதியாட்டத்துக்கு இந்திய அணி தகுதிபெற்றது.

இந்நிலையில், இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 75 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 76 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, 16.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 77 ஓட்டங்களைச் சேர்த்து 6 விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதன்மூலம் இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்திய அணியுடன் இலங்கை அணி மோதவுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை எந்தவொரு பதக்கத்தையும் வெல்லாத இலங்கைக்கு, பெண்கள் கிரிக்கெட்டின் மூலம் பதக்கம் ஒன்று கிடைக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இன்றைய இறுதிப் போட்டியில் இலங்கை வென்றால் தங்கம் கிடைக்கும். தோற்றால் வெள்ளிப்பதக்கம் கிடைக்கும்.

## ஆசிய விளையாட்டுகள் - 2023
## பெண்கள் கிரிக்கெட் இறுதிப்போட்டி




## செப்ரெம்பர் 25 - மு.ப. 11.30



# மாகாண மட்டத்தில் தடைதாண்டி தேசிய மட்டத்துக்கு மிகா தகுதி

(எம்.என். எம்.அப்ராஸ்)

மாகாண மட்ட தடை தாண்டல் போட்டியில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவன் தங்கம் வென்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை திருகோணமலை,கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றன.

இதில் 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 80 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா விதத்தியாலய மாணவன் எம்.எம்.எம்.ஆகில் மிகா முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அவர் தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.





# பதக்கங்களை அசால்டாக அள்ளிக் குவித்த தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்





(எம்.எம்.றம்ஸீன்)

கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் திருக்கோவில் தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் 13 தங்கப்பதக்கங்களை வென்று சாதித்துள்ளது.

அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலையத்தைச் சேர்ந்த தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் இந்த ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 விளையாட்டுகளில் 13 தங்கப்பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.09.2023




இன்று உங்கள் எண்ணத்திலும் செயலிலும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும் சூழ்நிலை காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மனம் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் மகிழ்ச்சி அளிக்கும். பணி சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிச் சூழல் மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் பலன் தரக் கூடிய சேமிப்புத் திட்டங்களில் நீங்கள் கலந்து கொள்ளலாம்.

உங்களின் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியை கொண்டாடுவதற்கு சாதகமான நாள் அல்ல. நீங்கள் பலன்களை தாமதமாகத் தான் எதிர்பார்க்க இயலும். இன்று அதிகம் எதிர்பார்க்க இயலாது.

அதிகப் பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

நகைச்சுவை போக்கு மூலம் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள இயலும். நீங்கள் இருவரும் வெளிப்படையாக பேசிக்கொள்ள வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை வளமாக மகிழ்சிகரமாக இருக்க வாய்ப்பில்லை. இன்று கூடுதல் செலவுகள் ஏற்படலாம்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம் இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று அமைதியான சகஜமான அணுகுமுறை தேவை. இன்றைய பலன்கள் உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

இன்று பணிச்சுமை அதி-கமாக காணப்படும். முன் கூட்டியே திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்றுபயணத்தின் போது பண இழப்பு காணப்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. உங்கள் கண்கள் மற்றும் பற்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது அவசியம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

பணியிடத்தில் நிகழும் சந்திப்புகளில் உங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் பாணி பாராட்டைப் பெறும். சக பணியாளர்கள் உங்களைப் புகழ்வார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று ஆக்கப்பூரவமான பலன்கள் கிடைக்காது. உங்களிடம் தைரியமும் உறுதியும் குறைந்து காணப்படும். உங்களுக்கு உற்சாகமான போக்கு தேவை. சிறிய பயணம் மற்றும் மாறுதல் இன்று உங்களுக்கு சாத்தியம்.

பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரா மல் இருக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மோதல் காணப்படும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வை தக்க வைக்க பக்குவமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இன்று பண இழப்பு ஏற்படலாம்.

இன்று உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மற்றும் யோகா மேற்கொள்வது நல்ல பலன் தரும்.




இன்று சாதகமான பலன்களை அமைய புரிந்துணர்வுடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.கவனமற்ற வார்த்தைகள் பேசாத வகையில் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது சாத்தியமில்லை. நீங்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும். சமயோசித புத்தியை பயன்படுத்தி பணிகளை வெற்றிகரமாகமுடிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும் போது எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பண இழப்பை தடுக்க பணத்தை கவனமாகக் கையாளவும்.

பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்க நீங்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். நேர்மையான எண்ணங்கள் மூலம் தன்னம்பிக்கையை உருவாக்கலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை சிறப்பாக முடிக்க நீங்கள் கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்களில் ஈடுபட வாய்ப்புள்ளது. எனவே இருவரும் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அமைதியாக இருப்பதன் மூலம் இன்று மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று பண வரவு போதுமானதாக இருக்காது. பண இழப்பைத் தடுக்க இன்று பணத்தை சாதுரியமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நேரம்.

நீங்கள் சவாலான பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் இது சாத்தியம்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உங்கள் துணையிடம் நம்பிக்கை பெருகும்.

பூர்வீகச் சொத்து மூலம் இன்று பண வரவு ஏற்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -25.09.2023




இன்று பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். நம்பிக்கையுடன் செயல்படுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது.




உங்களின் துரதிர்ஷ்டம் காரணமாக மதிப்பு மிக்க வாய்ப்புகளை பயன் படுத்த இயலாத நிலையில் இருப்பீர்கள். கடைசி நிமிடத்தில் நல்ல வாய்ப்பை இழப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

முறையாக திட்டமிடுவதன் மூலம் மற்றும் கவனமாக பணியாற்றுவதன் மூலம் இன்று நீங்கள் பிழையின்றி பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் நட்பான அணுகுமுறை கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலும்.

இன்று அதிகாரிக்கும் செலவுகள் காணப்படும். இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சோம்பலுடனும்தேவையற்ற மனக் குழப்பங்களுடனும் காணப்படுவீர்கள். நேர்மறையான எண்ணங்கள் மூலம் நன்மை காணலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு பெற இயலாது.

குழப்பமான மனநிலை காரணமாக உங்களின் கசப்பான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

இன்றுபணஇழப்புகாணப்படுகின்றது.இதுஉங்களுக்கு கவலை அளிக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும் நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பனியின் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இன்று சிறப்பாக சேமிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park